| | | |
|---|---|---|
| சாட்சி : DW 2<br>திரு.தனராஜ்<br>த/பெ.பெருமாள் | அ.வ.எண். 296/2017 | 07.04.2026 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) எனது சொந்த ஊர் என்ன என்றால் பூனாம்பாளையம். பூனாம்பாளையத்தில் நான் எங்கு உள்ளேன் என்றால் மந்தியார்ஓடை. மேற்படி மந்தியார்ஓடைக்கும், வடக்குபட்டிக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சேர்ந்தே தான் இருக்கும். மந்தியார்ஓடைக்கு எந்த பகுதியில் வடக்குபட்டி உள்ளது என்றால் கீழ்புறத்தில் உள்ளது.

2) எனக்கு சொந்தமான வீடு எங்கு உள்ளது என்றால் மந்தியார்ஓடையில். எனக்கு மேற்படி ஊர் தான் பூர்வீகமா என்றால் ஆமாம். எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்திற்கு விவரம் சொன்னது நான் தான் என்றால் சரிதான். என்ன வழக்கு எண்ணிற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் வழக்கு எண் தெரியாது.

3) இவ்வழக்கை யார் யார்மேல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ராஜ்குமார் மனைவி வெண்ணிலா என்பவர் மாசீஸ்வரன், பொன்னாயி, லெட்சுமி, நாச்சாரம்மாள் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். எங்கள் ஊரை சேர்ந்த இளங்கோவன், சுப்ரமணி, கோவிந்தன் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும்.

4) மேற்படி நபர்கள் இவ்வழக்கில் உள்ளார்களா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராஜ்குமார் மனைவி வெண்ணிலா எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் புல எண்.164/2 சொத்திற்காக. மேற்படி சொத்து எங்கு உள்ளது என்றால் வடக்கிப்பட்டி, வாத்தியார் பண்ணை என்ற பகுதியில் உள்ளது. வழக்கு சொத்து

தொடர்பாக வருவாய் ஆவணங்கள் பார்த்தீர்களா என்றால் பட்டாவை மட்டும் ஒரு முறை பார்த்துள்ளேன். பட்டா எண் என்ன என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி பட்டா எந்த வருடம் வழங்கப்பட்டுள்ளது என்றால் 2000 ற்கு முன்பு உள்ளது, ஆனால் தற்போது இல்லை.

5) பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்றால் மாசீஸ்வரன், பொன்னாயி, லெட்சுமி, நாச்சாரம்மாள் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டாவாக இருந்தது. மேற்படி பட்டாவை நான் எவ்வளவு நாட்களுக்கு முன் பார்த்தேன் என்றால் சுமார் 1–1/2 வருடத்திற்கு முன்பு இருக்கும். மாசீஸ்வரனுக்கும், வெண்ணிலாவுக்கும் இடையேயான பிரச்சனை எவ்வளவு காலமாக உள்ளது என்றால் சுமார் 6, 7 வருடங்களாக இருக்கும்.

6) மாசீஸ்வரனுக்கும், வெண்ணிலாவுக்கும் இடையே 10 வருடங்களாக பிரச்சனை உள்ளது என்றாலும், ஆனால் 6, 7 வருடங்களாகவே பிரச்சனை உள்ளதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, எனக்கு பிரச்சனை தெரிந்ததிலிருந்து சொல்கிறேன். தாவா சொத்து சம்மந்தமாக வில்லங்க சான்றிதழ் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

7) தாவா சொத்தை நேரில் பார்த்துள்ளேனா என்றால் நான் அதே ஊர் என்பதால் பார்த்துள்ளேன். வாதி வெண்ணிலா எவ்வளவு விஸ்தீரண சொத்திற்கான இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் 34 சென்ட். மேற்படி தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் கிழக்கில் வெண்ணிலாவின் வீடு, தெற்கில் காலியிடம், வடக்கில் வயல் உள்ளது அது யாருடையது என்று தெரியாது, மேற்கில் மாசீஸ்வரன் வீடு உள்ளது.

8) வழக்கு சொத்திற்கு வடக்கில் உள்ள வயலின் புல எண் என்ன என்றால் தெரியாது. கிழக்கே உள்ள புல எண் என்ன என்றால் தெரியாது. தெற்கே உள்ள புல எண் என்ன என்றால் தெரியாது. மேற்கே உள்ள புல எண் என்ன என்றால் தெரியாது. வழக்கு சொத்திற்கு வடக்கே புல எண்.162ம், தெற்கே புல எண்.163ம், கிழக்கே புல எண்.164/2Dம், மேற்கில் புல எண்.164/2Bம் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி எல்லைக்குட்பட்ட இடம் 12 சென்ட் விஸ்தீரணம் கொண்ட புல எண்.164/2C என்றாலும், 34 சென்ட் அல்ல என்றாலும் சரியல்ல.

9) தாவா சொத்திற்கான பட்டாவை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் கேட்டு பார்க்கிறேன். தாவா சொத்து தொடர்பான புலவரைபடம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் வழக்கு சொத்து வாதியுடையது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார், ஆனால் வழக்கு சொத்தை எனக்கு தெரிந்து மாசீஸ்வரன் தான் அனுபவம் செய்து வருகிறார், கடந்த 5 வருடங்களாக தான் பிரச்சனை.

10) வழக்கு சொத்து என்று நான் மேற்படி 34 சென்டை தான் கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி 34 சென்டிற்கு யார் உரிமையாளர்கள் என்றால் மாசீஸ்வரன், பொன்னாயி, லெட்சுமி, நாச்சாரம்மாள் ஆகியோர். கிருஷ்ணமூர்த்தி மகன் வெங்கட்ராமன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வெங்கட்ராமனுக்கு மேற்படி 34 சென்டில் உரிமை உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11) ராமசாமி மகன் வெங்கடாசலத்தை தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வெங்கடாசலத்திற்கும், மேற்படி 34 சென்டில் உரிமை உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாச்சாரம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை ராஜ்குமார் யாரிடமிருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் ராஜ்குமார் வாங்கினார் என்று சொல்கிறார்கள், ஆனால் அவர் வாங்கவில்லை.

12) எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் கொஞ்சம் தெரியும். இவ்வழக்கு சொத்தில் ஒரு பகுதியான 24 சென்டை நாச்சாரம்மாளிடமிருந்து ராஜ்குமாரும், வெங்கடாஜலமும் 2010 ல் வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை நான் பார்த்ததில்லை. இது தொடர்பான சார்பதிவக வில்லங்க பதிவுகளையும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

13) மேற்படி வெங்கடாசலமும், ராஜ்குமாரும், மேற்படி 24 சென்டை பாகம் பிரித்துக் கொண்ட விவரம் தெரியுமா என்றால் பாகம் செய்யவில்லை, இதுவரையில் அளந்ததும் இல்லை. நான் வேலைக்கு செல்கிறேன் என்றால் ஆமாம். எனது வேலை நேரம் என்ன என்றால் காலை 8.30 முதல் மாலை 5 முதல் 6 மணி வரை. இந்த இடைப்பட்ட நேரத்தில் அளக்க வாய்ப்புள்ளதா என்றால் அளந்திருக்கலாம், ஆனால் அளந்திருந்தால் உறவினர் என்பதால் எனக்கு தெரிந்திருக்கும்.

14) தாவா ஊரில் உள்ள சொத்துக்களை அளவீடு செய்யும் போது என்னிடம் சொல்வார்களா என்றால் உறவினர்கள் என்பதால் தாவா சொத்தை அளவீடு செய்ய சொல்லியிருப்பார்கள், பொதுவாக ஊர் பட்டயதாரர் மூலம் அளப்பார். வழக்கு சொத்தை பொறுத்து எந்த பதிவு ஆவணங்களையும், வில்லங்கத்தையும் பார்க்காமல், நான் இவ்வழக்கை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15) தாவா புல எண் தொடர்பாக இதுவரையில் எத்தனை ஆவணங்கள், என்னென்ன ஆவணங்கள் பதிவாகியுள்ளன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா புல எண்ணிற்கான கூட்டுப்பட்டாத்தாரர் யாருக்கு கிரையம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து தொடர்பாக வருவாய் துறையில் பட்டா மாற்று உத்தரவு எதையேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

16) தாவா சொத்தை வாதியின் கணவர் வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்து வெண்ணிலா பெயருக்கு புல எண்.164/2C ல் உள்ள 12 சென்டிற்கு பட்டா எண்.7277 உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இடத்திற்கு வாதி வெண்ணிலா பெயரில் நிலவரி உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் மாசீஸ்வரன் அனுபவத்தில் உள்ள போது பிரிக்காமல் வரி செலுத்த முடியாது.

17) அப்படியானால் மாசீஸ்வரன் சொல்வதை வைத்து தான் நான் நிலம் பிரிப்படவில்லை என்று கூறுகிறேன் என்றால் இல்லை, முன்பிருந்தே மாசீஸ்வரன் தான் அனுபவித்து வருகிறார். மாசீஸ்வரன் அனுபவத்து வரும் சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் வடக்கே வயல் யாருடையது என்று தெரியாது, தெற்கே மாசீஸ்வரனின் காலியிடம் உள்ளது, கிழக்கே ராஜ்குமார் வீடு, மேற்கே மாசீஸ்வரனின் வீடு, மாட்டுகொட்டகை உள்ளது (சாட்சி பின்னிட்டு தெற்கே மாசீஸ்வரனின் காலியிடம் தள்ளி உள்ளதாக கூறுகிறார்).

18) மாசீஸ்வரன் அனுபவித்து வருவதாக சொல்லும் மேற்படி நான்கெல்லைகளுக்கு உட்பட்ட சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. மேற்படி சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. 12 சென்டான வழக்கு சொத்து புல எண்.164/2C க்கு வாதி பெயரில் பட்டா உள்ளது என்றாலும், தாவா சொத்திற்கும், மேற்சொன்ன நான்கெல்லைக்குட்பட்ட சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

19) தாவா புல எண்ணின் ஒரு கூட்டுப்பட்டாதாரராகிய நாச்சாரம்மாள் அவரது 24 சென்ட் சொத்தை தகுந்த நான்கெல்லை காட்டி 06.04.2010 ம் தேதியில் கிரைய ஆவண எண்.1501 ன் படி வாதியின் கணவர் ராஜ்குமாருக்கும், மற்றொரு நபர் வெங்கடாசலத்திற்கும், கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் தான் வா.சா.ஆ.2 ஆவணத்தை மேற்படி கிரையத்தாரர்கள் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டனர் என்றால் சரியல்ல.

20) மேற்படி பாக ஆவணத்தில் கிடைத்த சொத்தை வாதியின் கணவர் வாதிக்கு பாத்தியப்படுத்தி வா.சா.ஆ.4 செட்டில்மெண்ட் மூலம் பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனடிப்படையிலேயே தாவா சொத்தின் பட்டா வா.சா.ஆ.6 வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து 34 சென்ட் என்று நினைத்து நான் சொல்கிறேன் என்றால் ஆமாம். தாவா சொத்தை வாதி செட்டில் மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் அனுபவித்து வருகிற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், ஆனால் அதை மறைத்து தாவா சொத்து கூட்டு சொத்து என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

21) வாதி வெண்ணிலா வேலைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்.152/2 ற்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். வாதியின் கணவர் ராஜ்குமார், தாவா சொத்து மற்றும் புல எண்.152/2 ஆகியவற்றை பொறுத்து மோசடி செய்ததாக நான் கூறுவதை பொறுத்து வாதியின் கணவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம்.

22) மேற்படி புகார் மனு ரசீது எதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் கணவர் மோசடி ஆவணம் உற்பத்தி செய்ததாக எதை வைத்து சொல்கிறேன் என்றால் பெருமா, பொன்னாயி ஆகியோரின் சொத்தையும், மற்றொரு நால்வரின் சொத்தையும், மொத்தமாக 10 குடும்பத்தை ஏமாற்றி உள்ளதால் மோசடி என்று சொல்கிறேன்.

23) இது தொடர்பாக வாதியின் கணவருக்கு எதிராக புகாரோ, வழக்கோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன், சிலர் வழக்கு தொடுத்துள்ளார்கள், எனது தயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் வழக்கு தொடுக்கவில்லை. யாரெல்லாம் வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் மாசீஸ்வரன். வழக்கு எண் என்ன என்றால் தெரியாது. வேறு யாரெல்லாம் வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் ஒண்டிமுத்து வழக்கு தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது.

24) ஒண்டிமுத்து தாக்கல் செய்த வழக்கு எண் மற்றும் தரப்பினர்கள் பெயர் தெரியுமா என்றால் வழக்கு எண் தெரியாது, ஒண்டிமுத்து ராஜ்குமாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஒண்டிமுத்து ராஜ்குமாருக்கு எதிராகவோ, ராஜ்குமார் ஒண்டிமுத்துவிற்க்கு எதிராகவோ எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆனால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

25) ராஜ்குமார் மைத்துனர் சரவணன் வகையறாவிற்கும், ஒண்டிமுத்துவிற்கும் இடையே தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, முடிவுற்றது என்றால் சரியல்ல, ராஜ்குமாரும் மேற்படி வழக்கில் உள்ளார். வழக்கு விவரங்களும், வழக்கு சொத்து விவரங்களும் தெரியாமல் நான் வாதியின் கணவர் ராஜ்குமாருக்கு ஆதரவாக இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

26) தாவா சொத்தை வாதி நான்கெல்லையுடன் வேலி அமைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், ஆனால் பிரதிவாதி

அனுபவித்ததாக வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் கணவர் ராஜ்குமார் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி ராஜ்குமார் ரியல் எஸ்டேட் தொழிலை முன்பு செய்ததும் இல்லை, தற்போதும் செய்ததும் இல்லை என்றால் சரியல்ல.

27) நான் ராஜ்குமார் மேல் உள்ள காழ்புணர்ச்சி காரணமாக அவர் மோசடி ஆவணம் தயாரித்து சொத்துக்களை பிளாட் போட்டு விற்பனை செய்து வருவதாக வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் கருவேல மரங்கள் உள்ளது என்பதற்கு ஆவணம் சாட்சியம் உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்து காலியிடமாக உள்ளது என்றாலும், அதில் கருவேல மரங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, கம்பி வேலி எதுவும் கிடையாது.

28) புல எண்.164/2 ல் ஒரு பகுதியை கிரையம் பெற்றதாக ராஜ்குமார் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் கிரையம் வாங்கவில்லை. வெண்ணிலாவும், ராஜ்குமாரும் மேற்படி புல எண்ணை விலைக்கு வாங்கியதாக கூறி பிரச்சனை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் அனுபவிக்கவில்லை, கம்பி வேலியும் அமைக்கவில்லை.

29) வழக்கு சொத்தை வாதியே அனுபவித்து வருகிறார் என்றாலும், பிரதிவாதிகள் அனுபவிக்கவில்லை என்றாலும், ஆனால் வழக்கு சொத்தை வாதி அனுபவிக்கவில்லை என்றும் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து சர்வே எண்.164/2 ல் உள்ள 14 ஏர்ஸ் விவசாய நில

காலிமனையில் கிராம மக்கள் நடந்து செல்லும் வகையில் காலிமனையாகவும், கருவேல மரங்களும், ஆடு மாடுகளும் கட்டிக்கொண்டும் இருந்து வரும் சொத்து என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

30) தாவா சொத்தில் ஒரு பகுதியில் வாதியும், அவரது கணவரும் வீட்டு குப்பைகளை கொட்டிக்கொண்டு, ஆடு, மாடுகளை கட்டிக்கொண்டும், அனுபவித்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன், மேற்படி சொத்து தான் தாவா சொத்து என்றாலும், மேற்படி விவரம் தெரிந்தே மோசடியாக வாதி மேற்படி சொத்தை வாங்கவில்லை என்றும் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் கூட்டுப்பட்டாவில் உள்ள மற்ற பங்குதாரர்கள் அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல.